ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අතිවිශේෂමානது

අංක 2165/12 - 2020 මාර්තු මස 03 වැනි අඟහරුවාදා - 2020.03.03

*2165/12 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்**

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.*

*இக்கட்டளை 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆந் திகதியிலிருந்து ஆரம்பமாகும் 06 மாத காலப்பகுதிக்காக, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டு 2019.09.30 ஆந் திகதிய 2143/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டு 2020.02.06 ஆந் திகதிய 2161/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக மீன் (எச். எஸ். தலைப்பு இல. 03.02, 03.03 மற்றும் எச். எஸ். குறியீடு 0303.54 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மக்கரல் மீன் நீங்கலாக) சம்பந்தமாக வெளியிடப்பட்ட உத்தரவுகள் 2020, மாச்சு மாதம் 04 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2020, மாச்சு 03.

1A - PG 4916 — 567 (2020/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 01. | 03.02 | | மீன், புதிய அல்லது குளிரூட்டப்பட்டவை தலைப்பு 03.04 இன் கீழ் தரப்பட்ட முள்ளற்ற துண்டுகளையும் மீன் இறைச்சியையும் தவிர்ந்தவை | 10% அல்லது கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 150.00 இவற்றுள் கூடிய வரித் தொகை |
| | 03.03 | | மீன், குளிரால் உறையச் செய்யப்பட்டவை தலைப்பு 03.04 இன் கீழ் முள்ளற்ற துண்டுகள் மற்றும் பிற மீன் இறைச்சி நீங்கலாக (எச். எஸ். குறியீடு 0303.54 இன் கீழ் வரும் மக்கரல் மீன் தவிர்ந்த) | 10% அல்லது கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 150.00 இவற்றுள் கூடிய வரித் தொகை |

02-753

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.